# உள்ளம் மகிழ்கின்றோம்

உள்ளம் மகிழ்கின்றோம்
உவந்து தருகின்றோம்
எங்கள் காணிக்கை
ஏற்க விழைகின்றோம் - ( 2 )
இறைவனே உம்மையே
பணிகின்றோம் புகழ்கின்றோம்
இனிதாகிடும் அருள் யாவுமே
வரமாகிட வேண்டுகின்றோம் (உள்ளம்)

1
உம்மையன்றி எமக்கு இங்கு மீட்பு இல்லையே
உறவு கொண்டு உம்மில் வாழ
வழியும் இல்லையே - ( 2 )
இறைவனே உமக்கென்று
படைப்பெல்லாம் படைக்கின்றோம்
வாழ்வுமாக வழியுமாக
வழமுமாக வேண்டுகின்றோம்

2
அன்பு என்னும் உலகம் இங்கு ஆகவில்லையே
அன்பு முழுதும் அணிந்த உள்ளம் காண்பதில்லையே - ( 2 )
அன்பெல்லாம் நீரன்றோ
நம்பினோம் வாழ்கின்றோம்
பாலும் தேனும் கனியும் வைத்து
பலியை ஏற்க வேண்டுகின்றோம்